அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 7

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்**<br><br>**நாள்: 29.01.2022** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br>**பக்கங்கள்: 16** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய மெய்யெழுத்துகள்
   1. வல்லினம்
   2. மெல்லினம்
   3. இடையினம்
   4. நெடில்

2. கடலும் கடல் சார்ந்த நிலமும்
   1. குறிஞ்சி
   2. முல்லை
   3. மருதம்
   4. நெய்தல்

3. நாவலன் நண்பனோடு பனியில் சறுக்கி மகிழ்ந்தான். இச்சொல்லியத்தில் சறுக்கி என்பது
   1. பெயர்ச்சொல்
   2. வினைச்சொல்
   3. பெயரெச்சம்
   4. வினையெச்சம்

4. தமிழ்ப்பாட்டு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. தமிழ் + பாட்டு
   2. தமிழ்ப் + பாட்டு
   3. தமிழர் + பாட்டு
   4. தமில் + பாட்டு

5. அப்பா தாயக மக்களுக்கு உதவுவதில் மனநிறைவு கொள்வார். இச்சொல்லியத்தில் நான்காம் வேற்றுமை உருபு ஏற்றசொல்
   1. உதவுவதில்
   2. தாயக
   3. மக்களுக்கு
   4. மனநிறைவு

6. வையகம் எங்கும் அமைதி நிலவ வேண்டும். இதில் வையகம் என்பது
   1. உலகம்
   2. நாடு
   3. விண்
   4. காடு

7. போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் அடிபணியாது வன்னியை ஆண்ட மன்னன்
   1. கயிலாயவன்னியன்
   2. எல்லாளன்
   3. கண்ணுச்சாமி
   4. சங்கிலியன்

1 2 3 4

8. பாளம்பாளமாக என்பது
   1. இணைமொழி
   2. அடுக்குத்தொடர்
   3. இரட்டைக்கிளவி
   4. அடுக்கிடுக்குத்தொடர்

9. "நல்லவர் ஒருவருக்குச் செய்த ..........." இச்சொற்றொடர்
   1. பெயர்ச்சொற்றொடர்
   2. வினைச்சொற்றொடர்
   3. பெயரெச்சச்சொற்றொடர்
   4. வினையெச்சச்சொற்றொடர்

10. ஈழத்தில் வன்னிப்பகுதி அமைந்துள்ள மாகாணம்
   1. வடக்கு மாகாணம்
   2. கிழக்கு மாகாணம்
   3. மத்திய மாகாணம்
   4. தென்மாகாணம்

11. அழுகை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. கவலை
   2. சிரிப்பு
   3. துன்பம்
   4. செழுமை

12. செம்மை + தமிழ் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. செந்தமிழ்
   2. செம்மைத்தமிழ்
   3. செம்மைதமிழ்
   4. செம்தமிழ்

13. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது
   1. எழுவாய்
   2. பயனிலை
   3. வேற்றுமை
   4. செயப்படுபொருள்

14. நடிக்கின்றோம் என்பது
   1. தன்மை பன்மை வினைமுற்று
   2. படர்க்கை பன்மை வினைமுற்று
   3. முன்னிலை பன்மை வினைமுற்று
   4. தன்மை ஒருமை வினைமுற்று

15. முற்காலத்தில் ஏடுகளில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது
   1. எழுத்தாணி
   2. எழுதுபலகை
   3. கரிக்கோல்
   4. வெண்கட்டி

1 2 3 4

16. ஓர் இனத்தின் அடையாளம்
    1. செல்வம்
    2. கல்வி
    3. புகழ்
    4. மொழி

17. ஆதிகாலத்தில் தமிழரின் தலைநகராகவும் வணிக நகராகவும் விளங்கிய ஊர்
    1. பூநகரி
    2. முல்லைத்தீவு
    3. வவுனியா
    4. மன்னார்

18. நாய் குரைக்கும் அதுபோல பூனை
    1. கத்தும்
    2. சீறும்
    3. உறுமும்
    4. பிளிறும்

19. கூற்றுச்சொல்லியமாக அமைவது
    1. கலை ஒன்றைக் கற்றுக்கொள்!
    2. தாய்மொழியைக் கற்போம்.
    3. என்னே! உன் தமிழ் அறிவு!
    4. விடுமுறைக்குச் செல்கிறீர்களா?

20. பறவைக்கூட்டம் குளக்கரையில்
    1. இருந்தது.
    2. இருந்தன.
    3. இருந்தவை.
    4. இருந்தனர்.

(20×1=20 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.**

1. கலை

   பெயர்:________________________________________

   வினை:________________________________________

2. பணி

   பெயர்:________________________________________

   வினை:________________________________________

(2×2=4 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் சொற்களின் திணை, பால், இடம் என்பவற்றை எழுதுக.**

| சொற்கள் | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| பாடினான் | | | |
| மீன்கள் | | | |

(6X1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் வினாக்களுள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வடமோடிக் கூத்துகள் எவற்றைக் கருப்பொருளாகக் கொண்டவை?

______________________________

2. வன்னி நிலப்பரப்பின் வடக்கு எல்லை எது?

______________________________

______________________________

3. சங்ககால இலக்கியங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?

______________________________

4. சொல்லிய உறுப்புகள் அனைத்தும் இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

5. தமிழருடைய உணவின் சிறப்புத்தன்மை யாது?

______________________________

6. ஐந்தாம் வேற்றுமை ‘இன்’ உருபு பெற்றுவரும் சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

7. விருப்புச்சொல்லிய வகைகளுள் ஒன்றிற்கு எடுத்துக்காட்டுச்சொல்லியம் எழுதுக.

______________________________

______________________________

(5×2=10 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பிறக்கும் போதே பெருமையோடு
பிறந்தவன் தமிழன் - தமிழ்ப்
பெருங்குடி தன்னிற் பிறந்தவன் ஆதலால்
முதலில் தோன்றிய மனிதன் தமிழன்
முதல் மொழி தமிழ்மொழி – ஆதலால்
புதுவாழ்வின் வேர் தமிழர் பண்பாடே!

- பாரதிதாசன்

1. முதலில் தோன்றிய மனிதன் யாரெனக் கவிஞர் கூறுகிறார்?

___

2. அவன் எவ்வாறான குடியில் பிறந்தவன் எனக் கூறப்பட்டுள்ளது?

___

3. புதுவாழ்வின் வேர் எது?

___

4. முதல் மொழி எதுவெனக் கூறப்பட்டுள்ளது?

___

5. பெருங்குடி என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

___

(5×1=5 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. நாங்கள் சுற்றுலாவுக்குச் சென்றோம்.

_______________________________________________

2. எனக்குத் தமிழ் படிக்க விருப்பம்.

_______________________________________________

3. நாங்கள் நல்ல நூல்களைத் தேடிப் படிப்போம்.

_______________________________________________

4. நான் அம்மம்மாவுக்கு அஞ்சல் எழுதினேன்.

_______________________________________________

5. பழங்களில் ஊட்டச்சத்துகள் நிறைந்துள்ளன.

_______________________________________________

(5×1=5 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. கூத்து
2. எமக்கு உதவுவோர்
3. காலைக்காட்சி

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- பார்த்த இடம்
- பார்த்த காட்சிகள்
- அவற்றுள் மனதுக்குப் பிடித்தவை

(15 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

# பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் தமிழ் மன்னனுடைய அரண்மனை சகல வளங்களுடன் பொலிந்து விளங்கியது. அரண்மனையின் முற்பகுதியில் வெற்றி முரசம் வைப்பதற்கென்று தனியே ஒரு கட்டில் இருந்தது. வெற்றி முரசம் அரசர்களால் உயிர் எனப் போற்றப்படுவது. காவலர் அதனை நீராட்டுவற்காக வெளியே கொண்டு சென்றனர். மன்னனைக் காண வந்த மோசிகீரனார் என்னும் தமிழ்ப்புலவர், நீண்டதூரம் நடந்த களைப்பால் முரசு வைக்கும் கட்டிலின்மீது சாய்ந்து இருந்தார். நித்திரையாகி விட்டார். முரசு கட்டிலில் துயில்வது பெருங்குற்றமாகும். அந்தச் செயலுக்குத் தண்டனை உண்டு. ஆனால், முரசு கட்டிலில் துயில்பவர் புலவர் என்பதை அரசன் அறிந்தார். புலவருக்குக் கவரி வீசினார். ஆ! எவ்வளவு உயர்ந்த பண்பாடு.

1. பெருஞ்சேரல் இரும்பொறை மன்னனுடைய அரண்மனை எவ்வாறு விளங்கியது?

___________________________________________

2. மன்னனனைக் காணச்சென்ற புலவர் என்ன செய்தார்?

___________________________________________

3. அரசர்களால் உயிரெனப் போற்றப்படுவது எது?

___________________________________________

4. புலவரைக் கண்ட அரசன் செய்தது என்ன?

___________________________________________

5. மன்னனைக் காணவந்த புலவரின் பெயர் என்ன?

___________________________________________

(5×2=10 புள்ளிகள்)

2. **கீழ்க்காணும் அழைப்பிதழை வாசித்துத் தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

## மாலதி தமிழ்ப்பள்ளியின் தமிழர் திருநாள் விழா 2022



**நிகழ்வுகள்:**
மங்கல விளக்கேற்றல்
வரவேற்புரை
பொங்கலிடுதல்
நடனம்
தமிழிசை
சிறப்புரை
நாடகம்
கவியரங்கம் - ஆண்டு 12
நன்றியுரை

**இடம்:** மாலதி தமிழ்ப்பள்ளி, டென்மார்க்

**காலம்:** 15.01.2022 சனிக்கிழமை 9:00 மணிமுதல்

**தொடர்புகளுக்கு:** 0045 11 23 56 48

**அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.**

**ஒழுங்கமைப்பு:** மாலதி தமிழ்ப்பள்ளி

1. தமிழர் திருநாள் விழா சனிக்கிழமை நடைபெற்றது. (    )
2. முதலாவதாக நடைபெற்ற நிகழ்வு பொங்கலிடுதல். (    )
3. நிகழ்வுகளில் சிறப்புரையும் ஒன்றாகும். (    )
4. கவியரங்கம் நிகழ்த்தியவர்கள் 10ஆம் ஆண்டு மாணவர்கள். (    )
5. விழாவை மாலதி தமிழ்ப்பள்ளி ஒழுங்கமைத்தது. (    )

(5×1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 04 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |